CC.131/2017 அ.சா 1 மருத்துவர் திருமதி.பூவிழி க/பெ. வேல்முருகன் வயது 32

நேரம். 02.30 P.M. 08/02/2021

மனு அனுமதிக்கப்பட்டு சாடசி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த புகாரை எந்த இடத்தில் நடந்த சம்பவததிற்காக வாணியம்பாடி மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் திருமணம் நடைபெற்றது நாட்றம்பள்ளியில் தாசரியப்பனூர் என்னுடைய கணவருடைய ஊர் ஆகும். நானும் 1வது எதிரியும் வாழந்தது சந்தைவாசல். சந்தைவாசலில் திருமணம் நைடைபற்ற நாளில் இருந்து டிசம்பர் 2016 ஆண்டு வரை அங்கு வாழந்து வந்தோம் அதன் பிறகு அடுக்கம்பாறை அருகில் உள்ள துத்திப்பட்டு என்றஇடத்தில் 1வது எதிரியும்வாழந்து வந்தோம் இரண்டு இடத்தை பற்றி தான் நான் புகாரில் தெரிவித்து வருகிறேன். சந்தை வாசலில் நடைபெற்ற சம்பவங்களை குறித்து புகார் கொடுத்ததாக முதன்மை விசாரணையில் கொடுத்து இருந்தது தவறா என்றால் சரிதான். ஆனால் சந்தை வாசலிலும் மற்ற இடங்களிலும் நடந்த சம்பவங்களை குறித்து தான் புகார் கொடுத்து இருக்கிறேன். 1வது எதிரி தூக்க மாத்திரை வாயில் திணித்தாக சொல்லும் சம்பவம் எங்கு நடைபெற்றது என்றால்சந்தைவாசிலில் இருந்து துத்திப்பட்டுக்கு காரில் வந்து கொண்டிருந்தபோது 1வது எதிரிதாயார் இருவரும் சேர்ந்து தான் தூக்க மாத்திரையை எனது வாயில் திணித்தார்கள். எத்தனை மாத்திரையை என் வாயில் திணித்தார்கள் என்றால் வாய் நிறைய 1ம் எதிரியும் அவருடைய தாயாரும் திணித்தார்கள். மாத்திரை திணித்தது குறித்து நான் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் எங்கு மருத்துவசிகிச்சை பார்த்தார்கள் என்றறு எனக்கத் தெரியாது. 1ம் எதிரியின் தாயார் தான் சிஎம்சி மருத்துவமனையில் சிகிச்சையை எனக்கு பார்த்தாக தெரிவித்தார்கள். எத்தனை நாட்கள் சுயநினைவுடன் இருந்தேன் என்று எனக்குத் தெரியாது இந்த சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 2017ம்ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் இந்த சம்பவம் நடைபெற்றது. எதிரிகள் நான் சொல்வதை போல இந்த சம்பவம் செய்யவில்லை என்றும், நான் மருத்துவர் என்பதால் நானே தூக்க மாத்தீரையை தானே போட்டுக்கொண்டதாகவும், நான் மருத்துவர் என்பதால் மருத்துவமனை சென்று சிகிசசை பெறவில்லை என்றும் எததிரிகளை வேண்டுமென்றேஇவ்வழக்கில் மாட்டி விடவேண்டும் என்று புகாரில் மிகைப்படுத்ததி கூறியதாக இறுதி அறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சிஎம்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சுயநினைவு இன்றி இருந்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் எந்த மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக செல்வில்லை என்று இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கையில தொவித்துள்ளார்என்றால் நானே சிகிச்சைபெற்றதாக தெரிவிக்கவில்லை. 1வது எதிரியின் தாயார் சொன்னதின் அடிப்படையில் எனக்கு சிகீச்சை அளித்ததை தெரிவித்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் தூக்கமாத்திரை கொடுத்து என்னை

கொலை செய்ய முயற்சி செய்ததாக மிகைப்படுத்தி சொல்லியதாக சொல்லியிருந்தால் அது சரியல்ல. சந்தைவாசலில் 1வது எதிரி நடத்தி வந்த மருத்துவமனையில் நான் மருத்துவம் பார்த்தேனா என்றால் மருததுவபணி பார்க்கவில்லை. மருத்துவமனையில் மேற்பார்வை பார்த்து வந்தேன். நான் 1வது எதிரி நடத்தி வந்த மருத்துவமனையில் மேற்பார்வை (Superviser) பார்த்து வந்த விவரத்தை எனது முதன்மைவிசாரணை, புகார் போலிசார் கொடுத்த வாக்குமூலத்தில் தெரிவித்தேனா என்றால்தெரிவிக்கவில்லை மருத்துவமனையில் பார்த்து வந்ததாக தெரிவித்தேன். அதுகூட 1ம் எதிரியின் வேண்டுகோளின் அடிப்படையில் தான் அந்த மருத்துவமனையில் மேற்பார்வை பார்த்து வந்தேன். நான் மேற்படி மருததுவமனியில் மருத்துவராக பணி செய்து அ்தில் இருந்து வந்த வருமானத்தை 1ம் எதிரியின் கடன்காரர்களுக்கு கடன் கொடுத்தேன் என்று எனது முதன்மை விசாரணை, புகார் மற்றும் போலிசார் விசாரணையில் நான் தெரிவித்து இருந்தால் அது சரி தான். ஆனால் நான் மருத்துவம் பணி பார்க்கவில்லை அந்த மருததுவமனையை நிர்வகித்து வந்த பணத்தை தான் 1ம் எதிரி கடன்காரர்களுக்கு கொடுத்தேன். அதில்இருந்து வந்த வருமானத்தின் 1ம் எதிரியின் 5சதவீத கடனை மட்டும் தான் அடைத்தேன். 1வது எதிரி எந்தெந்த கடன்காரர்களுக்கு எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கடனாக கொடுதது நான் அடைத்தேன் என்றால் அந்த கடன்காரர்களின் பெயர்களை நான் கூறமுடியாது மருததுவமனை சம்மந்தமாக வாங்கப்பட்ட கடன்களுக்கு ' அந்த கடனை கொடுத்துள்ளேன். மருத்துவமனையில் இருந்து வந்த வருமானங்களை எவ்வளவு ரூபாய் கடன்கார்களுக்கு கொடுத்தேன் என்று போலிசார் விசாரணையிலோ, புகாரிலோ, முதன்மைவிசாரணையிலோ தெரிவத்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் இந்தியாவில் மருத்துவப்படிப்பு படிக்கவில்லை என்றால்சரிதான். வெளிநாட்டில் மருத்துவப்படிப்பு பெற்றவர்கள் இந்தியன் மெடிக்கல் மருததுவ கவுன்சிலில் தேர்வில் தேர்ச்சி பெற்றபிறகு தான் மருத்துவராக மருத்துவப்பணி செய்ய்முடியும் என்றால் சரிதான். சந்தைவாசலில் நான் மருத்துவம் பார்த்தேன் என்று புகாரிலும், முதன்மை விசாரணையிலும், போலிசார் வாக்குமூலத்திலும் சொல்லியிருந்தால் சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. வெளிநாட்டில் மருத்துவம் படித்த இளநிலை மருத்துவ பட்டதாரி தனியாக மருத்துவம் பார்க்ககூடாது ஆனால் மருததுவ கவுனசில் கீழ் அங்கிகாரம பெற்ற மருத்துவரிடம் உதவி மருததுவராக பணிபுரிய சட்டத்தில் அனுமதி உண்டு. தனிபபட்ட முறையில் மருத்துவராக பணிபுரிய அனுமதி இல்லை என்றால் சரிதான். சந்தை வாசலில் மேற்படி மருத்துவமனியல் நான் தனி மருத்துவராக பணி புரிந்தேன் என்றால்சரியல்ல. மேற்படி மருத்துவமனையில் நான் சட்டவிரோதமாக மருத்துவம் பார்க்ககூடாது என்று 1ம் எதிரி தெரிவித்ததினால்தான் எனக்கும் 1ம் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால்சரியல்ல. அதனால்தான் இதுபோன்ற பொய்யான புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக சந்தைவாசலில் என்னை போலிசார் வரவழைத்து விசாரித்தார்களா என்றால்

விசாரிக்கவில்லை வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தான் என்னை விசாரித்தார்கள். என்னுடைய முதன்மைவிசாரணயில் என் கணவர் என்னை 2ம்தராரமாக திருமணம் செய்து உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால்சரியலல என் கணவருக்கு நடைபெற்ற முதல் திருமணத்தை மறைத்து 2வது திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளேன். 1வது எதிரி முதல் திருமணம் செய்துக்கொண்ட விவரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் 1ம் எதிரி மது அருந்திஉள்ள நேரத்தில் அவர் சொல்லி தான் தெரியும். அவர் சொல்வதறக்கு முன்பு 1வது எதிரிக்கு முதல் திருமணம் நடைபெற்ற விவரம் தெரியுமா என்றால் உறுதியாக தெரியாது ஆனால் பெண்களுடன் தொடர்பு இருப்பது தெரியும்.1வது எதிரி முதல் திருமணம்செய்து கொண்ட பெண்ணின் பெயர் என்னவென்றால் 1ம் எதிரி ரமீணா என்று அழைப்பார் ஆனால் விசாரணையில் அந்த பெண்ணின் பெயர் ஜெயந்தி என தெரியவந்தது. 1வது எதிரி முதல் திருமணம் செல்லாது என அறிவிப்பு கோரி நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு தாக்கல்செய்துள்ளேனா என்றால் வழக்கு தாக்கல ் செய்யவில்லை. இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் என் உறவினர்களுக்கு நான் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். இந்த சம்பவத்தை குறித்து எங்கள் உறவினர்களுக்கு நேரிடையாக தெரியாது என்றால் நான் சொல்லி தான் எனது பெற்றோர்களுக்கு தெரியும். 1வது எதிரி முதல் திருணம் செயது கொண்டாதாக சொல்லும் பெண் வீட்டிடம் சென்றேனா என்றால் சென்றேன் அங்கு சென்றபோது சத்தம்போட்டு அடித்து மிரட்டி விட்டு வந்தேனா என்றால் இல்லை. நான் அங்கு சென்று ரெஜினாவை அடித்து கொலை மிரட்டல் செய்துவிட்டு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அ்தில் இருந்து தப்பிப்பதற்காக தான் 1வது எதிரியை ரெஜினா மீது தொடர்பு படுத்தி இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ரெஜினாவிற்கு எதிராக் 1வது எதிரி விவகாரத்து மனு தாக்கல் செய்து அந்த மனுவில் 1வது எதிரியும் ரெஜினாவும் சோந்து வாழ்வதாக சமாதானம் செய்து கொண்டு அந்த மனு முடித்து வைக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு திருப்பத்தூர் நீதிமன்றத்தில் நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் நான் புகார் கொடுததேன் ஏ்ன்றால வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 27.04.2017ம்தேதி அல்லது 28.04.2017ம்தேதி புகார் கொடுத்து இருப்பேன். அந்த புகாரின் அடிப்படையில் தான் இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் மாவட்ட காவல்துறை கண்கணரிப்பாளர் அனைத்து மகளிர் காவல்நிலையம்சென்று வேறு ஒரு புகார் கொடுக்கச்சொன்னார் அந்த புகாரின் அடிப்படையில் தான் இந்த வழக்கு நடைபெறுகிறது. புகார் கொடுத்த எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தாகள் என்றால் புகார் கொடுத்த அடுத்த நாளே என்னை அழைத்து விசாரித்தார்கள். என்னை விசாத்த அன்றே எனக்கு முதல் தகவலின் அறிக்கையின் நகலை போலிசார் வழங்கினார்களா என்றால் 17.05.2017ம்தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது அன்றைய தினம் தான் முதல்தகவல் அறிக்கை நகல் வழங்கினார்கள். மாவட்டகாவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் என்னை

எப்போது விசாரித்தார்கள் என்றால் அந்த புகாரில் என்னை விசாரிக்கவில்லை. 1வது எதிரிக்கும் ரெஜினாவிற்கும நடைபெற்ற முதல் திருமண பதிவு சான்றிதழ் நகல்களை நான் காவல்நிலையத்தில கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. எந்த தேதியில் 1வது எதிரிக்கும் ரெஜினாவிற்கும் நடைபெற்ற முதல் திருமணம் பதிவு செய்யப்படட விவரம் எனக்க தெரியவந்தது என்றால் நான் புகார் கொடுத்தபிறகு விசாரணையின் போது ரெஜினா வந்த பிறகு தான் எனக்கு திருமணம் பதிவு செய்யப்பட்ட தேதி தெரியவந்தது. ரெஜினா போலிசார் விசாரணைக்கு எந்த தேதியில் வந்தார் என்றால் தேதி தற்போது தெரியவில்லை. 1வதுஎதிரிக்கும் ரொஜினவிற்கும் நடைபெற்ற பதிவு திருமணம் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரி என்னை கத்தி காட்டி மிரட்டியதாக சொல்லும் சம்பவம் எந்ததெதியில்நடைபெற்றது என்றால் 2017ம ஆண்டு ஏப்பரல் மாத்தில் நடைபெற்றது தேதி குறிபிப்ப்பட்டு சொல்ல முடியாது. இந்த சம்பவம் எங்கு நடைபெற்றது என்றால் திருப்பத்தூரில் ஆசிரியர் நகரில் உள்ள எனது பெற்றோர் வீட்டில் நடைபெற்றது. இது சம்மந்தமாக திருப்பத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை 1வது எதிரியின் தகப்பனாரிடம் எனது பெற்றோாகள் 1வது எதிரி திருமணம் செய்து கொண்டது குறித்து கேட்டார்கள். நான் சொல்வதை போல சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனது கணவர் சொல்லை மீறி நான் மருததுவம் பார்த்தினால் எனக்கும் 1வது எதிாக்கும்அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னை மருத்துவம் பார்க்க விடாததினால் 1வது எதிரியிடம் சோந்து வாழ விருப்பம் இல்லாததினாலும் பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் அனைத்தும் பொய்யானது எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. இிவவழக்கு சம்பவங்கள் நான் புகார் கொடுத்த காவல்நிலைய எல்லைக்கும் நீதிமன்ற எல்லைக்கும் இல்லாத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

எ4 மற்றும் எ5 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் 4 மற்றும் 5வது எதிரிகளுக்கு எதிராக குற்றம் சாட்டு நான் எதையும் தெரிவிக்கவீல்லை என்றால் சரியல்ல தெரிவித்துள்ளேன். திருமணம் நடைபெற்ற பிறகு 2 நாட்கள் மட்டுமே நான் எனது மாமியார் வீட்டில் இருந்ததாக வழக்கில்தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் மாவட்ட சமூகநல துறை அலுவலர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்துள்ளார்கள். சமூகநல துறை அலுவலா் விசாரித்த விவரத்தை என்னுடைய முதன்மை விசாரணையிலோ புகாரிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் 4வது மற்றும் 5வது எதிரிகள் பெயரை குறிப்பிட்டு குற்றச்சாட்டுக்களை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்தள்ளேன்.

அதுபோல குற்றச்சாட்டக்கள் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 27.04.2017ம்தேதி புகார் கொடுத்ததாக புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை இந்த வழக்கில் தாக்கல்செய்ததது 17.05.2017ம்தேதி என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மற்றும் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் சம்பவம் சந்தை வாசலில் நடைபெற்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சந்தை வாசல் என்ற கிராமம் திருவண்ணாமலை மாவட்டத்தை சார்ந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இந்த வழக்கிற்கும் 4வது மற்றும் 5வது எதிரிகளுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்மந்தம் உள்ளது. முதன்மை விசாரணையில் நான் சொல்லி உள்ள விவரங்கள் தவறானது என்று சொன்னால் சரியல்ல. இதுநாள் வரை ரசியாவில் படித்த மருத்துவப்படிப்பிற்கு இந்தியாவில் அங்கீகாரம் பெறவில்லை என்றால்சரிதான். ஆனால் என்னுடைய புகாரில் டாக்டர் பூவிழி என்று கொடுத்துள்ளேன் என்றால்சரிதான். நான் மருத்துவ இளங்கலை பட்டதாரி என்பதினால் நான் மருத்துவர் என்று என் பெயருக்கு முன்னால் போட உரிமை உள்ளது. நான் மருத்துவம் பார்கக்க்கூடாது என்று வேல்முருகன் என்னை தடுத்ததினால் வேலமுருகனின் மீது இருந்த கோபத்தினால் 4வது மற்றும் 5வது எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை. நேரரம். 03.50

CC.131/2017 அ.சா 2 வெங்கடாசலம் த /பெ. கரிகண் வயது 68 நேரம். 04.00 P.M.
08/02/2021

மனு அனுமதிக்கப்பட்டு சாடசி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

முதன்மை விசாணையில் சொல்லி உள்ள விவரங்கள் அனைத்தும் சந்தை வாசலில் நடைபெற்றது, வேலூரில் நடைபெற்றது என்றால்சரிதான். இந்த இரண்டு இடங்களில் நடைபெற்ற சம்பவ விவரங்கள் என் மகள் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் என் மகள் மட்டும் என் மகளின் மாமியார் சொல்லி தெரியும். சம்பங்களை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். என் மகள் சந்தை வாசலில் மருத்துவராக பணி செய்து வந்தார் என்றால் சரியல்ல. மருத்துவமனையை பராமரித்து வந்தார். சந்தை வாசலில் மருத்துவராக பணிபுரிந்து சம்பாதித்த வருமாணத்தை 1வது எதிரியின் கடன்களை அடைத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை போலிசார் விசாரணையிலோ புகாரிலோ 100 சவரன் நகை போட்டதாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கு வாயில் தூக்க மாத்திரை போட்ட விவரம் என் மகள் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். வேல்முருகன் ஏற்கனவே முதல் திருமணம் செய்து கொண்ட பெண்ணின் பெயர் என்னவென்றால் மாசிலாஜெயந்தி ஆகும். 1ம் எதிரிக்கு நடைபெற்ற முதல் திருமண பதிவு சான்று நான் வாங்கிக்கொடுத்தேனா என்றால் நான் வாங்கிக்கொடுக்கவில்லை அந்த விவரம் மட்டும் தான் தெரியும். 1ம் எதிரிக்கு முதல் திருமணம் குடியாத்தத்தில் நடைபெற்ற விவரம் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் வேல்முருகன் சொல்லி தெரியும். 1வது எதிரிக்கு நடைபெற்ற முதல் திருமணம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என் மகள் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலிசார் விசாணையில் தெரிவித்துள்ளேனா என்றால்தெரிவித்துள்ளேன். வேல்முருகன் 1வது எதிரி பெறற் கடன்களை யார் யாருக்கு என்ன தொகை கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடன் கொடுத்த விவரம் தெரியும் யார் யாருக்கு என்ன பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. 1ம் எதிரி வேல்முருகன் மீது புகார் கொடுத்து வேலையை விட்டு நீக்கிவிட்டீர்களா என்றால் இல்லை திருமணம் முடிந்த உடனே எனது மகளும் 1வது எதிரியும் சந்தைவாசலில் குடியிருந்தார்கள் என்றால்சரிதான். இந்த சம்பவங்கள் அனைத்தும் சந்தை வாசலில் நடைபெற்றது என்றால் சரியல்ல சந்தை வாசலில் நடைபெற்றது, வேலூரில் நடைபெற்றது மற்றும் தாசரியப்பனூரில் நடைபெற்றது. தாசரியப்பனூரில் என்ன நடைபெற்றது என்றால் 1ம் எதிரியின் மாமா, அவருடைய அப்பா, அம்மா, பெரியப்பா ஆகியோர்கள் எங்களை வரச்சொன்னார்கள் அப்போது இந்த சம்பவம்' நடைபெற்றது தவறு என்றும்' சமாதானமாக போய்விடலாம் என்று சொன்னார்கள் நாங்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டோம். மேற்படி விவரத்தை போலிசார் விசாணையிலோ, முதன்மை விசாரணையிலோ தெரிவித்துள்ளேனா என்றால்

தெரிவித்துள்ளேன். என்னுடைய கெட்ட நடவடிக்கையால் தான் வேல்முருகனின் வேலை பறிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக புகாரை நான் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் என்னை விசாரித்தார்களா என்றால் வாணியம்பாடியில் புகார் கொடுக்கச் சொல்லி அனுப்பி விட்டார்கள். வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அறிவுறுத்தினால் வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி தற்போது அரசு பணியில் உள்ளரா என்பது எனக்குத் தெரியாது. 1வது எதிரி தற்போது அரசு பணியில்' இல்லாத காரணத்தினால் என் மகளை 1ம் எதிரியுடன் வாழ வைக்ககூடாது என பொய்யான புகாரை கொடுதததுள்ளேன் என்றால்சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சந்தைவாசலில் நடைபெற்ற சம்பவத்தை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. 1வது எதிரி எந்த வரதட்சனை கேட்கவில்லை என்றும் எந்த பெண்ணையும் முதல்தாராமாக திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாணை இல்லை. நேரம். 04.15

CC.131/2017 அ.சா 3 செல்வி க /பெ. வெங்கடாசலம் வயது 52 நேரம். 04.15 P.M.
08/02/2021

மனு அனுமதிக்கப்பட்டு சாடசி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இவ்வழக்கு குறித்த சம்பவங்கள் என் மகள் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். என் மகளுக்கும் 1ம் எதிரிக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 10.07.2016ம்தேதி திருமணம் நடைபெற்றது. 1வது ் எதிரி 100 சவரன் கேட்ட விவரத்தை போலிசார் விசாணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் எதிரி கேட்டார். எனது மகள் தூக்க மாத்திரை சாப்பிட்ட விவரம் யார் சொல்லி தெரியும் என்றால் என் பெண்ணின் மாமியார் சொல்லி த்ான தெரியும். எனது மகளை அன்றைய தினமே நான் போய் பார்த்தேனா என்றால் வீட்டில் போய் பார்த்தேன். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் சந்தை வாசலில் நடைபெற்றது என்றால் சரிதான். 1வது எதிரி தற்போது அரசு மருத்துவராக இலலை என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1வது எதிரி தற்போது அரசு மருததுவா் இல்லை என்பதால் எனது மகளைஅவருடன் வாழ வைக்க விருப்பம் இல்லை என்று் நான் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை. நேரம். 04.20